செ.வெ.எண் :107 நாள் : 30.07.2021

தூத்துக்குடி மாவட்ட அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள், அரசு உதவிபெறும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் சுயநிதி தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேர்ந்திட இணையதளம் வாயிலாக 04.08.2021ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் - மாவட்ட திறன் பயிற்சி அலுவலக உதவி இயக்குநர் திருமதி.ஜெ.ஏஞ்சல் விஜய நிர்மலா அவர்கள் தகவல்.

---

2021-ஆம் ஆண்டில் தூத்துக்குடி மாவட்ட அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் சேரவும் அரசு உதவிபெறும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் சுயநிதி தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் அரசுஒதுக்கீட்டு இடங்களில் சேர்ந்திடவும் இணையதளம் வாயிலாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பிக்கும் முறை:

www.skilltraining.tn.gov.inஎன்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பங்கள் பதிவு செய்ய வேண்டும். இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க மாணவர்களுக்கு உதவிடும் வகையில் தூத்துக்குடி, கோரம்பள்ளத்திலுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையம் மற்றும் மாவட்டதிறன் பயிற்சி அலுவலகம் ஆகியவற்றில் சேர்க்கை உதவி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் உள்ள மையங்களின் பட்டியல் மேற்குறித்த இணையதள முகவரியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வித்தகுதி: எட்டாம் வகுப்பு/பத்தாம் வகுப்பு/2021-ல் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருப்பின் ஒன்பதாம் வகுப்புமதிப்பெண் பட்டியல்

விண்ணப்பக்கட்டணம்: விண்ணப்பக்கட்டணத் தொகையானரூ.50/-விண்ணப்பதாரர் Debit Card/Credit Card/Net Banking / G-Pay வாயிலாக மட்டுமே செலுத்த வேண்டும்.

<u>இணையதளம் வாயிலாகவிண்ணப்பம் பதிவுசெய்யகடைசிநாள்: 04.08.2021</u>

மதிப்பெண் அடிப்படையில் நடைபெறும் இணையதள கலந்தாய்வுக்கான தரவரிசை பட்டியல் மற்றும் கலந்தாய்வு குறித்த விவரங்கள் கடைசி தேதிக்கு பிறகு இதே இணையதளத்தில் வெளியிடப்படும்.

மேலும் தொழிற்பயிற்சி நிலைய சேர்க்கைக்காக விண்ணப்பத்தினை பூர்த்தி செய்வதில் ஏதேனும் ஐயம் ஏற்படும் நேர்வில் தூத்துக்குடி மாவட்டம் கோரம்பள்ளத்திலுள்ள தூத்துக்குடி அரசு தொழிற் பயிற்சிநிலையம் அல்லது அவ்வளாகத்திலேயே அமைந்துள்ள மாவட்ட திறன் பயிற்சி அலுவலகத்தை நேரில் தொடர்பு கொள்ளலாம். மின்னஞ்சல் முகவரி:onlineitiadmission@gmail.com மற்றும் adthoothukudi@gmail.com அலைபேசி எண்: 9499055612 மற்றும் 9442548732 மற்றும் Whatsappஎண்:94990 55618 அலைபேசி எண்ணிலும் தொடர்பு கொண்டு விவரங்களை பெறலாம் என மாவட்ட திறன் பயிற்சி அலுவலக உதவி இயக்குநர் திருமதி.ஜெ.ஏஞ்சல் விஜய நிர்மலா அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் தூத்துக்குடி.